00029

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விமாணி சிறப்பு பட்ட நிகழ்ச்சித் திட்டம் - விசேடக்கல்வி

SNU6224 – கல்வி முகாமைத்துவம்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி I இன் சகல வினாக்களுக்கும் விடையளிப்பதோடு பகுதி II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 24.07.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

1. பொருத்தமானதொரு வரைவிலக்கணத்தின் துணையுடன் முகாமைத்துவம் எனும் எண்ணக்கருவினை விளக்குக.

2. ஹென்றி மின்ஸ்பேர்க் முன்வைத்துள்ளதன்படி முகாமையாளர் ஒருவரின் பிரதான வகிபாகங்களை குறிப்பிடுக.

3. F.W டெய்லர் முன்வைத்துள்ள விஞ்ஞான முகாமைத்துவ கோட்பாட்டின் ஐந்து (05) தத்துவங்களை குறிப்பிடுக.

4. "ஒழுங்கமைப்பொன்றின் அடைந்து கொள்ள வேண்டிய நோக்கங்கள் சிக்கலானவை." அத்தகைய சிக்கல் தன்மைக்கான காரணங்கள் மூன்றினை (03) குறிப்பிடுக.

5. பொருத்தமான உதாரணங்களை வழங்குவதனூடாக " உள்வாரியான வினைத்திறன் மற்றும் வெளிவாரியான வினைத்திறன்" ஆகிய எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.

6. "பாடசாலையொன்றின் அதிபரினால் வழங்கப்படும் தலைமைத்துவமானது முதல் வரிசை முகாமையாளர்கள்" என அழைக்கப்படுகின்றது. வினைதிறன்மிக்க அதிபர் ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும் தலைமைத்துவ பண்புகள் ஐந்தினை (05) பட்டியற்படுத்துக.

7. பிளேக் மற்றும் மவுட்டன் ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட முகாமைத்துவ சட்டகத்திற்கு அமைவாக "9,9 எனும் குழு முகாமைத்துவ பாங்கு ஒரு நல்ல முகாமையாளருக்குரிய சிறப்பான முகாமைத்துவ பாங்காகும். இந்த பாங்கிற்குரிய முகாமையாளர் ஒருவரின் வகிபாகங்கள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

8. "தேசிய மட்டத்திலான கல்வி நிருவாகத்திற்கு கல்வி அமைச்சே இலங்கையில் பொறுப்பாகவுள்ளது." கல்வி அமைச்சின் நிருவாகப் பொறுப்புக்கள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

(8x5 = 40 புள்ளிகள்)

# பகுதி II

9. "தெளிவாக இனங்காணப்பட்ட நோக்கங்களை ஒரு முகாமையாளரால் எந்தளவுக்கு அடைந்துக் கொள்ளப்படுகின்றது என்பதிலேயே ஒரு பாடசாலையின் விளைதிறன் தீர்மானிக்கப்படுகின்றது."

   i. விளைதிறன்மிக்க பாடசாலை என்பதால் நீங்கள் கருதுவது யாது?
   (4 புள்ளிகள்)

   ii. விளைதிறன்மிக்க இலங்கைப் பாடசாலைகளின் பண்புகள் நான்கினை (04) குறிப்பிடுக.
   (8 புள்ளிகள்)

   iii. இலங்கை பாடசாலைகளின் விளைதிறனை முன்னேற்றுவதற்கு நான்கு (04) ஆலோசனைகளைக் குறிப்பிடுக.
   (8 புள்ளிகள்)

10. i. முகாமைத்துவ செயன்முறைகளின் பிரதான மூலங்கள் நான்கினை (04) குறிப்பிடுக.
   (4 புள்ளிகள்)

   ii. அவற்றில் ஒன்றினை (01) தெரிவு செய்து பாடசாலை முகாமைத்துவத்தில் அதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.
   (6 புள்ளிகள்)

   iii தெரிவு செய்த மூலத்துடன் தொடர்புபட்ட எழுவினாக்கள் அல்லது சவால்கள் இரண்டினை இனங்கண்டு, அதனை எதிர்கொள்வதற்கு அல்லது இழிவளவாக்குவதற்கு பொருத்தமான ஆலோசனைகளை முன்வைக்குக.
   (10 புள்ளிகள்)

11. "கல்வியின் தரத்தினை முன்னேற்றுவதற்கு பாடசாலை மேற்பார்வை தேவையானதொன்றாகும்."

   i. பாடசாலை மட்டத்திலான மேற்பார்வைச் செயன்முறையின் நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் நான்கினை (04) குறிப்பிடுக.
   (4 புள்ளிகள்)

   ii. நீங்கள் ஒரு மேற்பார்வையாளர் என கருத்திற்கொண்டு, ஆசிரியர் மற்றும் மாணவர் ஆகிய இரண்டு தரப்பினரையும் கவனத்திற் கொண்டு வகுப்பறை மேற்பார்வைக்கான படிவம் ஒன்றினை தயாரிக்கவும்.
   (6 புள்ளிகள்)

   iii. விளைதிறன் மிக்க வகுப்பறை மேற்பார்வையாளரிடம் எதிர்பார்க்கப்படும் பண்புகள் நான்கினை (04) குறிப்பிடுக.
   (4 புள்ளிகள்)

iv. சுயமதிப்பீடு என்பதால் நீங்கள் கருதுவது யாதென குறிப்பிட்டு ஆசிரியர் ஒருவர் சுயமதிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் இரண்டினை (02) குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

12. i. மெக்ஸ் வெபர் முன்வைத்த பணிக்குழுவாட்சி மாதிரியின் பண்புகளை குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

ii. பாடசாலை முகாமைத்துவ செயன்முறையில் பணிக்குழுவாட்சி மாதிரியின் பொருத்தப்பாட்டினை சுருக்கமாக விளக்குக. (14 புள்ளிகள்)

13. "F.W டெய்லர் (1915)குறிப்பிட்டுள்ளதன்படி முகாமைத்துவ பயிற்சியின் போது முகாமைத்துவ செயன்முறைகளின் விஞ்ஞான ரீதியான முறைகள் பயன்படுத்தப்படுவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்."

i. பாடசாலை அதிபர் ஒருவருக்கு ஏன் கல்வி முகாமைத்துவப் பயிற்சி தேவைப்படுகின்றது? (6 புள்ளிகள்)

ii. கல்வி முகாமைத்துவ பயிற்சிகளில் உள்ளடக்க வேண்டிய நான்கு பரப்புகள் அல்லது தலைப்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii. கல்வித்துறைசார்ந்த முகாமையாளர்களுக்கு பயிற்சி வழங்குவதன் மூலம் கல்வி முறைமை அடைந்து கொள்ளக்கூடிய நான்கு (04) நன்மைகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

14. i. இலங்கையின் கல்வி முகாமைத்துவத்தில் நிலவுகின்ற நான்கு (04) பிரச்சினைகள் அல்லது எழுவினாக்களைப் பட்டியற்படுத்துக. (4 புள்ளிகள்)

ii. இலங்கையின் கல்வி முகாமைத்துவ துறையில் அத்தகைய பிரச்சினைகள் தோன்றுவதில் பங்களிப்பு செய்யும் நான்கு காரணிகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

iii அத்தகைய பிரச்சினைகளில் / எழுவினாக்களில் இரண்டினைத் (02) தெரிவு செய்து (14.i) அத்தகைய பிரச்சினைகள் அல்லது எழுவினாக்களுக்கு முகங்கொடுப்பதற்கு அல்லது இழிவளவாக்குவதற்குப் பொருத்தமான ஆலோசனைகளை முன்வைக்குக. (12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*